NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu, p3*
**Date:** 31 August 2018



தேசிய பல்கலைக்கழகத்தின் ‘இனோவேஷன் 4.0’ கட்டடத்தில் நடந்த ‘ஏஐ சிங்கப்பூர்’ன் முதலாம் ஆண்டு நிறைவு விழாக் கண்காட்சியை வர்த்தக தொழில்துறை அமைச்சர் எஸ். ஈஸ்வரன் பார்வையிடுகிறார். **படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

# ‘செயற்கை நுண்ணறிவில் திறனாளர்கள் தேவை’

செயற்கை நுண்ணறிவுத் துறையின் திறனாளர்களுக்குப் பற்றாக்குறை இருப்பதாக அனைத்துலக அரசாங்கங்கள், வர்த்தக தலைவர்கள், பாதுகாப்பு அமைப்புகள் ஆகியவை ஒருமனதுடன் கருதுவதாக தொடர்பு, தகவல் அமைச்சர் எஸ். ஈஸ்வரன் தெரிவித்தார்.

செயற்கை நுண்ணறிவுத் திறனை ஆழப்படுத்த முனையும் தேசிய திட்டமான ‘ஏஐ சிங்கப்பூர்’ன் முதலாம் ஆண்டு நிறைவு விழாவையொட்டி நேற்று நடந்த நிகழ்ச்சியில் உரையாற்றிய போது அவர் இவ்வாறு கூறினார். சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தின் ‘இனோவேஷன் 4.0’ கட்டடத்தில் இந்நிகழ்ச்சி நடந்தது.

செயற்கை நுண்ணறிவுத் துறையில் இன்னும் அதிக திறனாளர்கள் தேவைப்படுவதாக திரு ஈஸ்வரன் சொன்னார். சிங்கப்பூரில் வளர்ந்துவரும் செயற்கை நுண்ணறிவுத் துறைக்குத் தேவைப்படும் திறன்களை வளர்ப்பதற்காக இரண்டு திட்டங்கள் நேற்று அறிவிக்கப்பட்டன.

‘ஏஐ4ஐ’ எனப்படும் தொழில் துறைக்கான செயற்கை நுண்ணறிவுத் திட்டத்தையும் ‘ஏஐ4இ’ எனப்படும் அனைவருக்குமான நுண்ணறிவுத் திட்டத்தையும் ‘ஏஐ சிங்கப்பூர்’ உருவாக்கியுள்ளது. அடுத்த மூன்று ஆண்டுகளில் அத்திட்டங்களின் வழி, சுமார் 12,000 சிங்கப்பூரர்கள் செயற்கை நுண்ணறிவு பற்றி கற்றுக்கொள்ள முடியும்.

‘ஏஐ4ஐ’ திட்டத்தின் கீழ் 2,000 திறனாளர்களும், செயற்கை நுண்ணறிவு பற்றி கற்றுக் கொள்ளக்கூடிய தொழில்நுட்ப ஆற்றல் உள்ளவர்களும் மூன்று மாத பயிற்சியை மேற்கொள்ள முடியும்.

அடிப்படை நிலையில் செயற்கை நுண்ணறிவுச் செயலிகளை உருவாக்க அவர்களுக்கு இந்தப் பயிற்சியில் கற்றுத்தரப்படும். செயற்கை நுண்ணறிவுத் துறையில் உள்ள வேலை வாய்ப்புகளுக்கு தயார்படுத்தும் இந்தப் பயிற்சிக்கு விலைக்கழிவு உண்டு.

‘ஏஐ4இ’ திட்டத்தின்கீழ், 10,000 பேருக்கு மூன்று மணி நேர பட்டறை நடத்தப்படும். செயற்கை நுண்ணறிவையும் தகவல் ஆய்வையும் அந்தப் பயிரங்கு அறிமுகம் செய்யும். வேலையிலும் அன்றாட வாழ்விலும் செயற்கை நுண்ணறிவின் பயன்பாட்டைப் பற்றி விளக்குகிறது.

‘ஏஐ4ஐ’ திட்டத்திற்காக விண்ணப்பிப்போர், சிங்கப்பூரர் அல்லது நிரந்தரவாசியாக இருக்க வேண்டும் என்று தகவல் தொடர்பு, ஊடக மேம்பாட்டு ஆணையம் தெரிவித்தது.

மேலும், விண்ணப் பதாரர்கள் பல்கலைக்கழகப் பட்டத்தை அல்லது பலதுறைத் தொழிற்கல்லூரிப் பட்டயத்தைப் பெற்றிருக்க வேண்டும். இத்திட்டம் அக்டோபர் இறுதியில் தொடங்கும்.

‘ஏஐ4இ’ திட்டத்திற்கு கட்டணம் தேவை இல்லை. ஆனால் இத்திட்டத்தில் பங்கேற்போர் 12 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருக்க வேண்டும்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.